

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நாகாலாந்து ஆளுநர் இல.கணேசன் அவர்களின் அண்ணன் இல.கோபாலன் அவர்கள் உடல்நலக்குறைவால் மறைவெய்தியதையொட்டி நேற்று (8.1.2025) சென்னையில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, இல.கணேசன் அவர்களுக்கும், குடும்பத்தினருக்கும் ஆறுதல் கூறினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ. கருணாநிதி ஆகியோர் உள்ளனர்.

## சட்டப் பேரவையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பதில்... முதல் பக்கத் தொடர்ச்சி!

மாவட்டங்களுக்கு ஆய்வுப் பயணங்கள் மேற்கொள்ளும்போது, அங்குள்ள ஏழையெளிய மக்கள் இன்னும் எங்களுக்குக் கொஞ்சம் கூடுதலாகத் தர வேண்டும். மனு அளித்தும் கூட இன்னும் அனுமதி அளிக்காமல் இருக்கின்றார்கள் என்கிற விவரங்களை தெரிவித்தார்கள். எனவே, துணை முதல்வர் அவர்கள் ஏற்கெனவே மனு அளித்து, தகுதியுடைய நிலுவையில் உள்ள அனைவருக்கும் அந்தத் தொகையானது வழங்கப்படுமா? என்கின்ற விவரத்தைத் இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்:** சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் காந்திராஜன் அவர்கள், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் குறித்து சில விளக்கங்களை இங்கே கேட்டிருக்கிறார். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை செயல்படுத்துகின்ற சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையினுடைய அமைச்சர் என்ற முறையில் அவருக்கு ஒரு விரிவான பதிலை இங்கே அளிக்க விரும்புகின்றேன். தமிழ்நாட்டு மகளிரின் உழைப்பை அங்கீகரிக்கின்ற வகையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதற்கென்று சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு தமிழ்நாடு முழுவதும் ஒரு கோடியே 63 இலட்சத்து 57 ஆயிரத்து 195 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. One crore sixty three lakh fifty seven thousand one hundred and ninety five applications பெறப்பட்டன. அவற்றை ஆய்வு செய்ததன் அடிப்படையில், கிட்டத்தட்ட 70 சதவிகித விண்ணப்பங்கள் 70% அதாவது ஒரு கோடியே 6 இலட்சத்து 52 ஆயிரத்து 198 விண்ணப்பங்கள் முதற்கட்டமாக ஏற்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2023 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் தேதி காஞ்சிபுரத்திலே இந்த கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். மேலும், முதன்முறை விண்ணப்பித்தபோது நிராகரிக்கப்பட்ட மகளிர் மேல்முறையீடு செய்யவும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் கூடுதலாக சுமார் 9 இலட்சம் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டன. கடந்த டிசம்பர் மாதம், அதாவது சென்ற மாதம் 15 ஆம் தேதி மாதம் ஒரு கோடியே 14 இலட்சத்து 65 ஆயிரத்து 525 மகளிருக்கு 1,000 ரூபாய் உரிமைத்தொகை வழங்கப்பட்டுள்ளது. தற்போது இத்திட்டத்தின் விதிகளுக்குட் பட்டு, எவ்வளவு பேருக்கு கூடுதலாக வழங்க முடியுமோ, அவ்வளவு பேருக்கும் எவரும் விடுபடாமல் மகளிர் உரிமைத்தொகை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதை சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் காந்திராஜன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**எஸ். காந்திராஜன்:** நன்றியைச் சொல்வதற்காகத்தான். துணை முதல்வர் அவர்கள் விரிவான, தெளிவான விளக்கத்தைச் சொல்லியதற்கு என்னுடைய மனமார்ந்த, பணிவான வணக்கத்தையும், நன்றியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். இளைஞர்களுடைய விடிவெள்ளியாக எழுநாயகராக இருக்கின்ற துணை முதல்வர் அவர்கள் எதிர்காலத்திலே இந்தத் தமிழ் நாட்டினுடைய மிகச் சிறந்த பணிகளை ஆற்றுவதற்காக அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் அருளோடு என்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்து, வணக்கத்தையும் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி.

**ஈ.ஆர்.ஈஸ்வரன்:** தமிழ்நாட்டு பெண்களைத் தலைநிமிர வைத்த திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அதை அறிமுகப்படுத்தியபோது நம்மை விமர்சனம் செய்த கட்சிகள் கூட இன்றைக்குத் தங்கள் மாநிலத்திலே தமிழ்நாடு முதல்வரைப் பின்பற்றி அவர்கள் அங்கே அந்த உரிமைத்தொகையை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட இந்த உன்னதமான திட்டம் பல கோடிக்கணக்கான குடும்பங்களை இன்றைக்கு வாழ வைத்திருக்கிறது. நான் என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குச் செல்லும்போது, பல்வேறு குடும்பப் பெண்கள் விண்ணப்பங்களைக் கொடுக்கிறார்கள். கோரிக்கைகளை வைக்கிறார்கள். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இதே நிலைமை தான் இருக்குமென்று நான் கருதுகிறேன். ஏன் உங்களுக்குக்கூட, பேரவைத் தலைவருக்குக்கூட உங்கள் தொகுதியிலே பெண்கள் கேட்பார்கள். அப்படியிருக்கிற இந்தச் சூழ்நிலையில்,

**பேரவைத் தலைவர்:** கேட்டிருக்கிறார்கள்.

**ஈ.ஆர். ஈஸ்வரன்:** இந்தக் கேள்வி எல்லோருக்குமான கேள்வி. என்னுடைய தனிக் கேள்வி அல்ல. எல்லோருக்குமான கேள்வி. பயனாளிகளுடைய எண்ணிக்கை உயர்த்தப்படுமா, இப்போது விண்ணப்பம் கொடுக்கின்ற தகுதியுள்ள பெண்கள் அத்தனை பேருக்குமே இந்த கலைஞர் மகளிர் உரிமைத்தொகையைக் கொடுப்பதற்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்:** உங்கள் தொகுதியில் மட்டுமல்ல; என்னுடைய தொகுதியிலும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். இது அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பொருந்தும். பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் 2 இலட்சத்து 54 ஆயிரத்து 31 மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டு வருகின்றது. அதாவது, நாமக்கல் மாவட்டத்தில் விண்ணப்பித்தவர் களில் 67% பேர் 67 சதவிகிதம் பேர் உரிமைத் தொகை பெற்று வருகிறார்கள். குறிப்பாக, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் ஈஸ்வரன் அவர்கள் அவருடைய திருச்செங்கோடு தொகுதியில் மட்டும் மாதாமாதம் கிட்டத்தட்ட 44,000 பேர் மகளிர் உரிமைத் தொகை பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். உறுப்பினர் கேட்பதுபோன்று, திருச்செங்கோட்டில் மட்டு மல்ல; தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் நாங்கள் ஆய்வுக்குச் செல்கின்ற நேரத்தில் என்னிடத்திலும், நம்முடைய அமைச்சர் பெருமக்களிடத்திலும், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அத்தனை மக்கள் பிரதிநிதிகளிடத்திலும் இந்த உரிமைத்தொகை வேண்டி மகளிர் விண்ணப்பம் கொடுக்கின்றார்கள். இதுபற்றிய விவரங்களைச் சேகரித்து, நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளோம். முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரைகளைப் பெற்று, இதுவரை பயன் பெறாமல் உள்ளவர்களுக்கு இத்திட்டத்தின் உதவிகள் கிடைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை நிச்சயமாக எடுப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுகுறித்து சென்ற முறை விண்ணப்பிக்க இயலாதவர்கள், புதிதாக விண்ணப்பிக்கவும், திட்டத்தின் விதிகளைப் பூர்த்தி செய்யும் மகளிர் அனைவருக்கும் உரிமைத் தொகை வழங்கவும், மூன்று மாதங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நடைமுறைப்படி உறுப்பினர் அண்ணன் ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்களுடைய திருச்செங்கோடு தொகுதியிலும், மகளிருக்கு கூடுதலான எண்ணிக்கையில் விரைவில் உரிமைத் தொகை வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து பேசினார்.**



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி,தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் அவர்களின் வழிகாட்டுதலுடன் பாலக்கோட்டை அடுத்த ஜெர்த்தலாவ் ஊராட்சி சர்க்கரை ஆலையில் 58 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார்.உடன் மாநில விவசாய அணிதுணைச்செயலாளர்கூடப்பட்டிசுப்பிரமணி,ஒன்றியசெயலாளர்கள்முனியப்பன்,எம்வீடி.கோபால்,இலகிருஷ்ணன்,ஒன்றிய அவைத்தலைவர் இராஜாமணி,மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சந்திரசேகர்,மத்திய ஒன்றிய துணை செயலாளர் பி.எல். ஆர். ரவி,விவசாய அணி ஏ.வி.குமார்,கவுன்சிலர் சரவணன்,பி எல் ஆர். இளம் சூரியன்,பனங்காடு குமரன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்ட விவசாய அணி சார்பில் வி.லெட்சுமிபுரத்தில் நடைபெற்ற கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வுகளில் மாநில மருத்துவர் அணி அணி துணைச் செயலாளர் டாக்டர் ரகு. அண்ணாமலை, தலைமை கழக பேச்சாளர்கள் தூத்துக்குடி சரத் பாலா, ஆலங்குடி செல்வராஜ், இளம் பேச்சாளர்கள் பிரதீபா, சிவசக்தி, ஒன்றியச் செயலாளர்கள் இரா.கணேசன், ஆறு.சிதம்பரம், அரு.வடிவேலு, மாவட்ட விவசாய அமைப்பாளர் இரா.சிவகுமார், பி. அழகப்பன், க.பரமசிவம், எஸ்.ஆர்.வடிவேலு, ஆர். நிறைவு அண்ணா, சோ. தமிழ்ச் செல்வன், சி.முத்துச்சாமி, எஸ்.கே.ஆர்.ராஜேந்திரன், எஸ்.கே.சின்னத்தம்பி, பாலு .ராஜீவ் கண்ணன் இரா.மேகநாதன், கே. ஆர்.ராமசாமி, எஸ்.எம்.குமரேசன், அருண் சேகர் மற்றும் கழக நிர்வாகி ஏராளமானோர் உள்ளனர்.

# திருச்சி உச்சிப்பிள்ளையார் கோயிலுக்கு ‘லிப்ட்’ வசதி!

## சட்டப் பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதில்!



**சென்னை, ஜன.10–**

**சட்டப்பேரவையில் நேற்று திருச்சி உச்சிபிள்ளையார் கோயிலுக்கு லிப்ட் வசதி செய்து தரப்படுமா என்று தொகுதி உறுப்பினர் இனிகோ இருதய ராஜ் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதிலளிக்கையில், திருச்சி உச்சிபிள்ளையார் கோயிலுக்கு ‘லிப்ட்’ வசதி செய்து தரப்படும் என்றார்.**

இதுகுறித்து நடைபெற்ற விவாதம் வருமாறு :-

**முனைவர் இனிகோ இருதயராஜ்:** திருச்சிராப்பள்ளி (கிழக்கு) தொகுதி, மலைக்கோட்டை அய்யனார் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற இந்த திருக் கோயிலானது கடந்த 24-9-2024 அன்று சுமார் 30 இலட்சம் ரூபாய் செலவில் குடமுழுக்கு நடந்து முடிந்தது.

**முனைவர் த.இனிகோ இருதயராஜ்:** என்னுடைய கோரிக்கையை ஏற்று, தகுந்த நடவடிக்கை எடுத்து, குடமுழுக்கு நடத்திய அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சிராப்பள்ளி (கிழக்கு) சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோயிலிலே ரோப் கார் வசதி செய்து தரப்படும் என்று நமது தேர்தல் அறிக்கையில் கூறியவாறு, திராவிட மாடல் ஆட்சியிலே மிகச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிற அமைச்சர் சேகர்பாபு அவர்களும், நானும் 2023 ஆம் வருடம் திருச்சி மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோயிலை ஆய்வு செய்தோம்.

அப்போது 417 படிக்கட்டுகளையும் அமைச்சர் அவர்கள் விறுவிறு என்று ஏறினார். நான் மெதுமெது என்று மெதுவாக ஏறினேன். எனக்காகவாவது ரோப் கார் வசதி செய்து தரப்படும் என்று சட்டப்பேரவையிலே கூறினார்கள். feasibility ஆய்வு அறிக்கை என்ன சொல்கிறது? ரோப் கார் வசதி செய்து தருவதற்கு சாத்தியமா? அல்லது சாத்தியம் இல்லையா? சாத்தியம் இல்லையென்றால் lift வசதியாவது செய்து தர வேண்டுமென்று கோரிக்கை வைக்கின்றேன். அதேபோல் அந்த கோயிலுக்குச் சொந்தமான தெப்பக் குளம் முழுவதும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு தெப்பக் குளம் இருக்கிறதா இல்லையா என்று தெரியாமல் கடைகளும், சாக்கடை கழிவு நீர்களும் மீன்கள் செத்து மிதப்பதால் அந்தப் பகுதியிலே துர்நாற்றம் வீசுகிறது.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகளிடமும் பலமுறை முறையிட்டும் சரிவர நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அறநிலையத் துறைக்குச் சொந்தமான தெப்பக் குளத்தை தூய்மைப்படுத்த நடவடிக்கை எடுக்கவும், உச்சி பிள்ளையார் கோயிலுக்கு ரோப் கார் அல்லது lift வசதி செய்து தரவும் ஆக்கிரமிப்பு செய்துள்ள கடைகளை அகற்றி மீண்டும் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான தெப்பக் குளத்தை தூய்மைப்படுத்திட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** அவர்கள் கோரிய அந்த உச்சி பிள்ளையார் திருக்கோயி லுக்கு ரோப் கார் அமைக்க வேண்டுமென்ற ஆர்வம் இந்த திராவிட மாடல் ஆட்சிக்கு இருந்தபோதிலும் ITCOT நிறுவனத்திடம் சாத்தியக்கூறுகள் ஆராய்வதற்காக 2 முறை அவர்களுக்கு உத்தரவிட்டிருந்தோம். அவர்கள் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்த வகையில் கீழ், மேல் ஆகிய இரு தளத்தில் நிறுத்தத்திற்குண்டான இடம் இல்லையென்றும் அதேபோல் ticket counter, அலுவலகம் அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் இல்லையென்றும் அவர்களுடைய அறிக்கை தெரிவித்த பிறகு நானும் துறை சார்ந்த அதிகாரிகளும் 4 முறை ITCOT-னுடைய சிறப்பு அதிகாரிகளோடு சென்று ஆய்வு செய்தோம்.

முழுக்க முழுக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்று கூறிய பிறகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்தவுடன் lift வசதியை செய்துதரச் சொல்லி உத்தரவிட்டிருக்கின்றார். நிச்சயமாக அவர், நாங்கள் அந்த மலைக்குச் சென்றபோது கடினமாக ஏறினார் என்று கூறினார். அடுத்து இந்த ஆண்டு இறுதிக்குள் சுலபாக இறைவனை தரிசனம் செய்கின்ற நல்ல சூழலை உருவாக்கித் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அவர் கூறிய அந்த தெப்பக்குளம் என்பது 1947 ஆம் ஆண்டு அந்த மாநகராட்சிக்கு 100 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. அந்த மாநகராட்சியில் அவ்வப்போது சேருகின்ற கழிவுநீர் போன்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு தொடர்ந்து மாநகராட்சிக்கு இந்து சமய அறநிலையத் துறை அறிவுறுத்தி வருகின்றது.

இடையிலே சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் ஒரு பொது நல வழக்கு பதிவு செய்யப்பட்டு இருப்பதால் அந்த பொது நல வழக்கினுடைய இறுதி உத்தரவு பெறப்பட்ட பிறகு அந்த தெப்பக் குளத்தை முழுமையாக சீரமைத்துத் தரப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**முனைவர் த.இனிகோ இருதயராஜ்:** மீண்டும் அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லி, எனது திருச்சிராப்பள்ளி (கிழக்கு) சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காலக்கரை உய்யகொண்டான் கால்வாய் அருகே அமைந்துள்ள இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் 100 ஆண்டுகளுக்கு மேலான பழமையான கோயில் தற்போது சிதிலமடைந்து காட்சியளிக்கிறது.

1993 ஆம் ஆண்டுக்குப் பிறகு கும்பாபிஷேகம் நடத்தப்படவில்லை என்றும், கோயில் சொத்துகள் மீட்கப்படாமல் தனியார் ஆக்கிரமிப்பில் இருந்துள்ளதாகவும் பக்தர்கள் என்னிடம் கோரிக்கை மனு அளித்துள்ளனர். இந்து சமய அறநிலையத் துறைக்குச் சம்பந்தமான ஆக்கிரமிப்புகளை மீட்டு புனரமைக்கப் படாத கோயில்கள் எல்லாம் புனரமைத்து கும்பாபிஷேகம் நடத்தி வருகிற ஆட்சி நமது திராவிட மாடல் ஆட்சி. அமைச்சர் சேகர்பாபு அவர்கள் அந்தத் துறையிலே பதவியேற்றதற்குப் பிறகு தேடித் தேடி சென்று பழமைவாய்ந்த கோயில்களை மிகச் சிறப்பான முறையிலே கும்பாபிஷேகம் நடத்தி வருகிறார்.

அதேபோன்று ஸ்ரீ செல்வ விநாயகர் கோயிலை புனரமைத்து கும்பாபிஷேகம் நடத்த வேண்டும். அதேபோன்று சுந்தரதாஸ் தெருவிலே அமைந்துள்ள காசி விஸ்வநாதர் கோயிலிலும், சத்திரம் பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள காமாட்சி அம்மன் திருக்கோயிலும், ஆக இந்த மூன்று திருக்கோயில்களும் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார் என்கின்ற நம்பிக்கையோடு அவர்களின் பதிலை தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** அவர் கோரிய செல்வ விநாயகர் திருக்கோயில் என்பது சுமார் 11 திருப்பணிகள் ஒரு கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் தை மாதத்தில் பாலாலயம் செய்யப்படவிருக்கின்றது. அவர் கோரிய மீனாட்சி அம்மன் திருக்கோயிலும், காமாட்சி அம்மன் திருக்கோயிலும் தலா ரூ.10 இலட்சம், ரூ.15 இலட்சம் செலவில் இந்த தை மாதம் அதாவது ஜனவரி மாதம் இறுதிக்குள் பாலாலயம் நடைபெறவிருக்கின்றது என்பதைத் தெரிவித்து, அருமை அண்ணன் நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர் அந்தப் பாலாலயம் நிகழ்ச்சியில் மதங்களுக்கு அப்பாற்பட்டு பங்கேற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### ஆளுநர் ரவியின் ஜனநாயக விரோதப்போக்குக்கு எதிராக

# திருவாரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

### கழகத்தினர் ஏராளமானோர் பங்கேற்பு!

*திருவாரூர்,ஜன. 10-*

தமிழ்நாட்டின் கலாச்சாரங்களுக்கும், கண்ணியங்களுக்கும் களங்கம் கற்பித்து, பாசிச பா.ஜ.க.ஆட்சியின் அதிகாரத்திற்குள் தமிழ்மக்களை கொண்டு வரும் நோக்கத்துடன் செயல்பட்டுவரும் ஆளுநர் ரவியின் ஜனநாயக விரோதப் போக்கை கண்டித்து, கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி வழிக்காட்டுதல்களின்படி திருவாரூரில் மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் அவர்களின் ஆலோசனைகளின்படி நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமை ஏற்றார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அ.அசோகன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கம் ஜி.பாலு,முன்னாள் துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், நகர் மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ். கார்த்திக், சாந்தி பாஸ்கர்,மு.வெங்கடேசன் , ஒன்றிய செயலாளர்கள் வீ.அன்பரசன் , ஆர்.பாலச்சந்திரன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஞானசேகரன், ஆர்.எஸ். பாண்டியன், கோ.செல்வம், இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எஸ். குமார் உள்ளிட் டோர் முன்னிலை ஏற்றனர்.

ஆளுநர் ரவிக்கு எதிரான கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல், டி.எஸ்.டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த், தெட்சிணாமூர்த்தி, பிரபாகரன், ஜோதிராமன், கேப்டன் செல்வராஜ், இரா.மனோகரன், புலிவலம் .ஏ.தேவா, பா.பிரகாஷ், இரா.மனோகரன், ஐ.வி.குமரேசன் ,நகர செயலாளர்கள் வீரா.கணேசன், எஸ்.வி.பக்கிரிசாமி,சிவநேசன் ஏ.கே.டி.சேரன், பக்கிரிசாமி,தியாகு,பொதுக் குழு உறுப்பினர்கள் கலைவாணிமோகன், செல்வ. ஜெயதேவன், கணபதி, காஞ்சித்துரை, கமாலுதீன், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர் ஷோபா கணேசன், மீனாட்சி சூர்யபிரகாஷ், சதீஷ், தாஜுதீன், ராஜ்.என்கிறகருணாநிதி, எம்.என்.ராஜா, எண்கண். மணி,குன்னலூர் அன்பழகன்,பா.அரவிந்த்,பகலவன், தேசபந்து,வழக்கறிஞர். விநாயக மூர்த்தி, ஆர்.வி. ஆனந்த், ஆர்.பிரபாகரன், கரிகாலன்,திவாகரன் , திட்டக்குழு முன்னாள் உறுப்பினர் இரா.சங்கர்,மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ஆர்.வி.எல்.ரவி, அணி தலைவர்கள் வி.பி.பிரபாகரன், ராணிசேகர்,காசிராஜன் மற்றும் முன்னாள் இந்நாள் மாநில , மாவட்ட ,ஒன்றிய ,நகர ,பேரூர் கழக நிர்வாகிகள் , கழக உறுப்பினர்களுடன் பெருந்திரளான பொதுமக்களும், பெண்களும் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்ட முடிவில் நகர செயலாளர் வாரை.பிரகாஷ் நன்றி கூறினார்.

### நாகாலாந்து ஆளுநர் இல.கணேசன் அண்ணன்

# இல.கோபாலன் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஜன. 9-**

**நாகாலாந்து ஆளுநர் இல.கணேசன் அவர்களின் அண்ணன் இல.கோபாலன் அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தி விடுத்துள்ளார்.**

முதல்வர் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

நாகாலாந்து ஆளுநர் இல.கணேசன் அவர்களின் அண்ணன் இல.கோபாலன் அவர்கள் நேற்று (08.01.2025) காலை மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.

தலைவர் கலைஞர் மீதும் என் மீதும் மாறாத பற்று கொண்ட இல.கணேசன் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பினால் அவரைப் போன்றே நானும் வருந்துகிறேன். உடன்பிறந்த அண்ணனை இழந்து தவிக்கும் அவருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.